பாதுகாக்கவும். மூடிய உறை இல்லாத சகல வயர்களையும் வெளியே தெரியாமல் காப்பு உறைகளால் சுற்றிப் பாதுகாக்க வேண்டும்.

3. முடியுமானால், உள்ளூரில் உள்ள தகுதிவாய்ந்த மின்சார நிபுணர் மூலம் மின் இணைப்பை அமைத்து பாதுகாப்பை உறுதி செய்யவும்.

## கழிவு அகற்றல் முகாமைத்துவம்



வாழும் இடத்தின் கழிவுகள் சரியான விதத்தில் அழிக்கப்படாவிட்டால் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்படும். கழிவுகளைச் சேகரிப்பதும் அழித்தலும் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தும் வரை, கீழே குறிப்பிட்டவற்றைக் கவனத்தில் கொள்ளவும்.

1. வாழும் இடத்தில் கழிவுகளைக் குவிக்கக் கூடிய ஒரு தனித்த இடத்தை விரைவாகவே தெரிவு செய்து, சகலரும் அந்த இடத்திலேயே கழிவுகளைப் போட வேண்டும்.
2. தாழ்வான நிலப்பகுதியை அல்லது ஈரமான பகுதியையோ தெரிவுசெய்யக் கூடாது. ஈரமான குப்பைகள் விரைவாக நுளம்புகள் பெருகும் இடமாகவும் சுகாதாரப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தும்.
3. கழிவுகளை எரித்தல் மூலம் கனஅளவைக் குறைக்கலாம். ஆனால், மக்கள் உள்ள இடத்தில் காற்று வீசாதபோதுதான் இதனைச் செய்ய வேண்டும்.
4. தெரிவுசெய்யப்பட்ட இடத்தில், டிரக்டர் மூலம் நகரசபை அதிகாரிகளால் கழிவுகள் அகற்றப்படக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
5. கழிவுகளைச் சேகரிப்பதிலும், தெரிவு செய்யப்பட்ட இடத்தில் குவிப்பதிலும் உங்கள் சமூகத்தினர் உபயோகிக்கும் சிறிய அளவிலான சுத்தப்படுத்தல் முறைகளையும் பயன்படுத்தலாம்.



இடம்பெயர்ந்தோர் உள்ள இருப்பிடத்துக்கு ஆலோசனைகள் வழங்குவதற்கு நடமாடும் முகாம் அபிவிருத்தி மற்றும் சுகாதாரச் சூழ்நிலை விசேஷ நிபுணர் குழுக்கள் ஒழுங்காக வருவார்கள். உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, அவர்கள் சொல்லும் உதவிகளும், யோசனைகளும் உங்களுக்கு உதவியாக இருக்கும். உங்கள் பகுதிக்கு நடமாடும் குழு வரும் போது, தயவுசெய்து உங்கள் பிரச்சினைகளை விளக்கமாக அவர்களுக்குச் சுட்டிக்காட்டிச் சொல்லுங்கள். உங்களுக்கு முடிந்தவரையில் உதவுவதற்கே, அவர்கள் அங்கே வருகிறார்கள்.

# உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் முகாம் பாதுகாப்பு வழிகாட்டிகள்



NORWEGIAN REFUGEE COUNCIL

Shelter Coordination Cell

UNHCR
The UN Refugee Agency

நீங்கள் இந்தத் தற்காலிகத் தங்கும் இடத்துக்கு வந்த நேரத்துக்கும், முறையான முகாம் அமைக்கப்படும் முகாமைத்துவ நடவடிக்கைகளை அமைப்பதற்கும் இடைப்பட்ட நேரத்தில், நீங்களும் உங்களுடன் வந்த சமூகத்தவரும், அபாயங்களிலிருந்து தப்புவதற்குச் சில எளிமையான விதிகளை, நீங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

கீழே சொல்லப்படுவன - தங்குமிடத்தின் நிலைமைகளைச் சீர்திருத்தவும், பாதுகாப்பாக வாழும் இடமாக மாற்றவும் உதவக்கூடிய அடிப்படையான வழிகாட்டல்களாகும்.

## தங்கும் இடத்திற்கான திட்டமிடல்

ஆரம்பகட்டத்தில் வருகின்ற குடும்பங்களுக்கு முகாம் கூடாரங்கள் - அவசர இடைத்தங்கல் குடிலாகக் கொடுக்கப்படுகின்றன. அனேகமான சந்தர்ப்பங்களில் இந்தக் கூடாரங்களை அமைத்துக் கொள்வது உங்கள் பொறுப்பாகவே இருக்கும். கீழே தரப்படும் விடயங்கள் - கூடாரம் அமைக்கும் போது கவனிக்கப்பட வேண்டியவை:



1. ஒவ்வொரு கூடாரத்தையும் சுற்றிவர போதுமான இடைவெளி விட வேண்டும். னால், சுற்றிவர நடக்கவும், சாதாரண வாழ்க்கை நடவடிக்கைகளையும் செய்யக்கூடியதாயிருக்கும். தங்கியிருப்போர் சுலபமாக நடமாடக் கூடிய விதத்தில் தங்கள் உடைமைகளைத் தம் கூடாரத்துக்கு அருகிலேயே வைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.
2. இடவசதி குறைவாக இருக்கும் போது ஒரே அளவான நேரான அகலப் பாதைகள் இந்தக் கூடாரங்களுக்கு இடையில் இருப்பது பிள்ளைகள் பெற்றோரின் பார்வைக்கு அப்பால் செல்லாமல் விளையாட உதவியாக இருக்கும். நெருக்கமான கூடாரங்கள் இருப்பது, பிள்ளைகளைக் கண்காணிக்க முடியாததாகவும், பிள்ளைகள் காணாமல் போகவும் கூடும்.
3. நேரான, ஒழுங்கான பாதைகள், இரவில் நடமாடுவதற்கும் சுலபமாயிருக்கும்.

## நெருப்பு




நெருப்பு, கூடாரங்களுக்கு விரைவாகப் பரவக்கூடியது. அபாயமானது. தீ அபாயத்தைக் குறைப்பதற்கு, கீழே சொல்லப்பட்டவற்றைக் கவனத்தில் கொள்ளவும்.

1. வசிக்கும் கூடாரத்துக்கு அருகிலே சமைப்பதையே பலரும் விரும்புவார்கள். ஆனாலும், கூடாரங்களுக்கு வேறான இடத்தில் நெருப்பில் சமைப்பதே ஏற்றது.
2. தாம் இருக்கும் கூடாரத்துக்கு அருகிலேயே சமைக்க விரும்பினால், சிறிய சமையல் நெருப்பைச் சுற்றி கற்கள் வைத்து நெருப்புப் பரவாத முறையில் செய்ய வேண்டும். கூடாரங்கள், குடிசைகள் மேற்கூடாரங்களுக்கு 2 மீட்டர் (6அடி) தூரமாகவே, சமையல் நெருப்பை வைத்துச் சமைக்க வேண்டும் வந்திருக்கும் இடத்தில் திட்டமிடல் செய்யும் போது சமையல் செய்யும் இடத்தையும் கவனத்துக்கு எடுக்க வேண்டும்.



3. நெருப்பு பற்றக்கூடிய மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய் போன்றவற்றை மக்கள் இருக்கும் இடங்களுக்கு மிகவும் தூரமாகப் பொது இடத்தில் வைத்திருக்க வேண்டும். இந்தப் பொதுச் சேகரிப்பு இடத்துக்கு அருகில் நெருப்போ சுவாலையோ வராதபடி கவனமாக இருத்தல் அவசியம்.
4. வசிக்கும் பகுதியில் விளக்கேற்ற, ஒவ்வொரு இரவும் குறிப்பிட்ட அளவு எண்ணெய் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். வசிக்கும் குடிசைகளிலோ கூடாரங்களிலோ எண்ணெய் சேமித்து வைக்கப்படக்கூடாது.
5. முடியுமானால் மணல் அல்லது நீர் வாளிகள் சிறியநெருப்பை அணைக்க வைத்திருக்கலாம். இவை விரைவில் எடுத்துப் பாவிக்கக் கூடியதான ஒரு இடத்தில் வைக்கப்படவேண்டும்.
6. நெருப்பு பரவும் சந்தர்ப்பத்தில், அங்கிருக்கும் மக்களைப் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்புவதற்கே முக்கியத்தும் கொடுக்க வேண்டும். வாழ்க்கைக்கு அபாயம் இல்லாத வரையில் பாரிய நெருப்பை அணைப்பதற்காகக் காயமோ மரணமோ ஏற்படக் கூடிய அவசியமற்ற செயலைச் செய்ய வேண்டியதில்லை.

## தற்காலிக மின்சார இணைப்புகள்

உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு, பொதுவான வெளிச்சத்தைக் கொடுப்பதற்குத் தற்காலிக மின்சார இணைப்புகள் உபயோகிக்கப்படுகின்றன. இந்த விதமான மின்சார வழங்கலானது, விரும்பத்தக்கதல்ல. ஏனெனில் பிழையான இணைப்புகளால் நெருப்புக் காயம் அல்லது மரணம் போன்ற கணிசமான அபாயம் ஏற்படக் கூடும். இலங்கை மின்சார சபை மூலமாகப் பாதுகாப்பான மின்சார இணைப்பைச் சரியாக அமைக்கும்வரையும், மாற்றாக வெளிச்சத்துக்கான வேறு முறைகளை உபயோகப்படுத்துவது நல்லது.

தற்காலிக மின்சார இணைப்பையே உபயோகிக்க வேண்டியதாயிருந்தால் பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள்:

1. மின்சார வயர்களைப் பிள்ளைகளுக்கு எட்டாத விதத்தில் வைத்திருக்கவும். மரங்கள் மற்றும் மரக்கம்பங்களை உபயோகித்து அதிமின்சார வயரிங் அமைத்தலும் வெளிச்சம் கொடுப்பதும் எதிர்பாராத மின்சார ஷொக் (அதிர்ச்சி) போன்றவற்றைக் குறைக்கக் கூடும்.
2. ஹீவயர் இணைப்புகள் அனைத்தையும், மின்சாரத்தை வெளியில் கடத்தாத ஹீஇன்சியுலேட்டிங் டேப் மூலம் சுற்றிவைத்தும் அல்லது ஹீஇணைப்பு புளொக்ஸ் மூலமும்